ரோல்ஸ் ராய்ஸ் | ஊடகத் தகவல்

# மேலும் தூய்மையான பிளாக் பேட்ஜ் உடன் புதிய பிளாக் பேட்ஜ் கோஸ்ட் காரை அறிவிக்கும் ரோல்ஸ் ராய்ஸ்

அக். 28, குட்வுட், மேற்கு சசெக்ஸ்

- பிளாக் பேட்ஜ் கோஸ்ட் செழுமைமிக்க வடிவமைப்பிற்கு பிந்தைய இருண்ட பக்கத்தை அறிமுகப்படுத்துகிறது
- 6.75-லிட்டர் வி12 இன்ஜினுடன் தற்போது அதிக ஆற்றல் (600PS/592hp) மற்றும் முறுக்குவிசையுடன் (900NM) வெளிவருகிறது
- டிரைவ்ட்ரெய்ன் எனும் இதன் என்ஜின் உள் அமைப்பு மற்றும் சேசிஸ் ஆகியவை மிகவும் வேகமான செயல்திறனுக்கு ஏற்ப மறுவடிவம் பெற்றுள்ளன
- இதன் உட்புறம் டர்கீஸ் தோல் மற்றும் டெக்னிக்கல் கார்பன் வெனீர் ஆகியவற்றின் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளது
- பெஸ்போக் அலாய் வீல் கார்பன் பைபர் பேரலுடன் பிளாக் பேட்ஜ் ஹவுஸ் ஸ்டைலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது
- இதன் இன்பினிட்டி லெம்னிஸ்கேட் சின்னம் தனித்துவமிக்க சிறப்பு வாய்ந்த ரோல்ஸ் ராய்சின் வெளிப்பாட்டை குறிக்கிறது

இது குறித்து ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் கார்ஸ் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி டார்ஸ்டன் முல்லர்-ஓட்வோஸ் கூறுகையில்,
"குறிப்பிடத்தக்க உள் விவாதத்திற்குப் பிறகு, புதிய வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் விரும்பும் பிரத்யேக கார்களை வழங்கும் என்று அதிகாரப்பூர்வமாக ரோல்ஸ் ராய்ஸ் அறிவித்தது. அதன் தொடர்ச்சியாக பிரத்யேக கார்களை பிளாக் பேட்ஜ் என்ற பெயரில் வெளியிட்டது. இந்த கார்கள் கடந்த 2016-ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டன. அடர்த்தியான கறுப்பு நிறத்தில் மிக அழகிய வடிவமைப்புடன், ஆளுமையில் மிகவும் கம்பீரமாகவும், பார்ப்பவர்களை வியக்க வைக்கும் வகையில் இவை வெளிவந்தன.

கடந்த ஐந்து வருடங்களாக இந்த பிளாக் பேட்ஜ் கார்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. துணிச்சல்மிக்க மோட்டார் கார் நிறுவனமான எங்கள் நிறுவனம் ஒரு புதிய வகை அதிசொகுசு தயாரிப்புகளின் உச்சத்தை அடையாளப்படுத்தும் விதமாக பரந்து விரிந்த ஆடம்பரமிக்க கார் துறையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனைத் தொடர்ந்து ஏராளமான சொகுசு கார் உற்பத்தியாளர்கள் பிளாக் பேட்ஜ் கார்களை முன் மாதிரியாக வைத்து தங்கள் கார்களை தயாரித்து வருகிறார்கள்.



Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK

இன்று, புதிய வகையான பிளாக் பேட்ஜ் மோட்டார் காரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு தயாரிப்பை நாங்கள் அறிவிக்கிறோம், எங்கள் ரோல்ஸ் ராய்சின் மாற்று வடிவத்தை வகைப்படுத்த எங்களின் மிகவும் மேம்பட்ட மோட்டார் கார்கள் மேலும் உறுதியான, ஆற்றல்மிக்க மற்றும் வலிமையானதாக மறு வடிவமைக்கப்பட்டுள்ளன. கார் தயாரிப்பு வரலாற்றில் இதுவே தூய்மையான பிளாக் பேட்ஜ் மோட்டார் கார் ஆகும். அது பிளாக் பேட்ஜ் கோஸ்ட் என்று டார்ஸ்டன் முல்லர்-ஓட்வோஸ் தெரிவித்தார்.

அறிமுகம்

ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் கார்கள் அதன் வாடிக்கையாளர்களிடம் தனித்துவமான வரவேற்பை பெற்றுள்ளன. ஒரு குறிப்பிட்ட மாடலில் இருந்து வேறுபட்ட ஒரு மாடலை விரும்பும் பெண்கள் மற்றும் ஆண்களுடனான நெருங்கிய உறவானது அவர்களின் அழகிய விருப்பத்தேர்வுகள், சமரசமில்லாத வாழ்க்கை முறை தேவைகள் மற்றும் மாறிவரும் ரசனைகள் உள்ளிட்ட அதிநவீன சொகுசு பற்றிய நுகர்வோரின் இணையற்ற புரிதலை நிறுவனத்தின் முடிவெடுப்பவர்களுக்கு வழங்குகிறது. இந்த புரிதல் மற்றும் நிறுவனத்தின் சொகுசு நுண்ணறிவு பிரிவினரால் வழங்கப்படும் கருத்துகள் மட்டுமே துல்லியமான குறிப்பிடத்தக்க மாடலுக்கான உத்தரவாதத்தை அளிக்க முடியும். இதற்கு பிளாக் பேட்ஜ் கார்கள் ஒரு தெளிவான உதாரணம் ஆகும்.

ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் கார்கள் எப்பொழுதும் புரட்சிகர வாடிக்கையாளர்களை ஈர்த்து வருகின்றன - புரட்சிகர பெண்கள் மற்றும் ஆண்கள், விதிகளை மீறி, அபாயங்களை கடந்து, சவாலான மரபுகளை தாண்டி தங்கள் வெற்றியை அடைகிறார்கள். 2020களில் இந்த பெண்களும் ஆண்களும் தங்கள் விருப்பத்திற்கேற்ற ஆடம்பர தயாரிப்புகளை விரும்பினார்கள். அவர்கள் தெருக்களில் விற்பனை செய்யும் ஆடைகளை நிராகரிக்கிறார்கள், வங்கிகள் அல்லாமல் பிளாக்செயின் தொழில்நுட்பத்தை பயன்படுத்துகிறார்கள், அன்றாட வாழ்க்கை முறையில் இருந்து மாறிவரும் டிஜிட்டல் தொழில்நுட்பட்டத்தில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அவ்வாறு செய்வதன் மூலம், அவர்கள் தங்கள் உணர்வுகளுடன் எதிரொலிக்கும் புதிய ஆடம்பர குறியீடுகளை உருவாக்கியுள்ளனர். அவை கறுப்பு நிறத்திலான அழகிய தோற்றம், உறுதியான தன்மை மற்றும் கம்பீரமான வடிவமைப்பு ஆகியவை ஆகும்.

ரோல்ஸ் ராய்ஸ் தயாரிப்புகளிலும் அவர்களின் அணுகுமுறை மாறுபடவில்லை. ஒரு குறிப்பிட்ட மாடலில் இருந்து வேறுபட்ட ஒரு மாடலை விரும்பும் தைரியமான வாடிக்கையாளர்கள் குழுவிற்கு புதிய வண்ணங்கள், அதிநவீன தொழில்நுட்பம் சமரசம் இல்லாத அதிக சக்திவாய்ந்த ஓட்டுனர் அனுபவம் ஆகியவை அவர்களை ரோல்ஸ் ராய்ஸ் பக்கம் ஈர்த்துள்ளது.

பிளாக் பேட்ஜ் கார், ரோல்ஸ் ராய்சின் மிகவும் வெற்றிகரமான மாற்று வடிவம் ஆகும். இப்போது உலகளவில் 27% கமிஷன்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது மற்றும் மோட்டார் காரின் உட்புறத்தில் காணப்படும் சாத்தியமான இன்பினிட்டியை குறிக்கும் கணிதக் குறியீட்டால் குறியிடப்பட்டுள்ளது. லெம்னிஸ்கேட் என்றும் அழைக்கப்படும் இந்த கிராபிக், சர் மால்கம் கேம்ப்பெல்லின் சாதனை படைத்த



Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK

ரோல்ஸ் ராய்ஸ்-பவர்டு ப்ளூ பேர்ட் கே3 ஹைட்ரோபிளேனுக்குப் பயன்படுத்தப்பட்டது. இந்த அடையாளத்தை பிளாக் பேட்ஜ் மோட்டார் கார்களுக்குப் பயன்படுத்த வடிவமைப்பாளர்கள் பரிந்துரைத்தனர்.

ரோல்ஸ் – ராய்ஸ் நிறுவனம் 2016-ம் ஆண்டு பிளாக் பேட்ஜ் ரைத் மற்றும் கோஸ்ட் ஆகிய கார்களையும் அதனைத் தொடர்ந்து 2017-ம் ஆண்டில் டான், பிறகு 2019-ம் ஆண்டில் கல்லினன் ஆகிய கார்களை அறிமுகம் செய்தது. இன்று, புதிதாக பிளாக் பேட்ஜிற்கு பிந்தைய செழிப்பான வெளிப்பாடு இந்த குடும்பத்தில் இணைந்துள்ளது. அது பிளாக் பேட்ஜ் கோஸ்ட் என்ற தூய்மையான மற்றும் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட பிளாக் பேட்ஜ் மோட்டார் கார் ஆகும்.

செழுமைக்கு பிந்தைய இருண்ட பக்கம்

வேகமான, விவேகமான, தேவையற்ற வடிவமைப்பு இல்லாத ரோல்ஸ் ராய்ஸைக் விரும்பிய வாடிக்கையாளர்களுக்கு பதிலளிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட புதிய கோஸ்ட், இதுவரை தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட ரோல்ஸ் ராய்ஸ் கார்களில் மிகவும் அழகான கார் ஆகும். இந்த கார் அறிமுகம் செய்யப்பட்ட பன்னிரண்டு மாதங்களில், உலகளவில் 3,500க்கும் அதிகமான கமிஷன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புதிய மாடல் வரலாற்றில் வேகமாக விற்பனையாகும் தயாரிப்புகளில் ஒன்றாக மாறியுள்ளது.

இந்த மோட்டார் கார், குறைந்தபட்சவாதம் மற்றும் தூய்மையின் இடைவிடாத முயற்சியின் ஒரு புதிய வடிவமைப்பு உரையாடலுடன் தொடங்கப்பட்டது. இதற்கு ரோல்ஸ் ராய்ஸ் வடிவமைப்பாளர்களால் 'போஸ்ட் ஓபுலன்ஸ்' என்று பெயரிடப்பட்டது. இதற்கான தயாரிப்பில் விதிவிலக்கான பொருட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன.

எவ்வாறாயினும், இந்த வாடிக்கையாளர்களின் குழுவிற்குள் - மினிமலிசம் மற்றும் பொருட்களைக் கொண்டாடும் - ஒரு கிளர்ச்சியான துணைக்குழுவானது கோஸ்ட்டின் உணர்ச்சிபூர்வ வடிவமைப்பை உருவாக்க முற்பட்டது, அதை மிகவும் தூய்மையான நிழலில் நிரந்தரமாக மூடி வைப்பதன் மூலம் அதன் நிறம் ஒரு விவாதப் பொருளாகவே உள்ளது: கருப்பு. பிளாக் பேட்ஜ் கோஸ்ட் இந்த வாடிக்கையாளர்களின் விருப்பங்களை பிரதிபலிக்கிறது. இது செழுமைக்கு பிந்தைய இருண்ட பக்கம்: இது கலைநுட்பம் மற்றும் எளிமையால் வகைப்படுத்தப்படுகிறது.

உட்புறம்

வாடிக்கையாளர்கள் தாங்கள் விரும்பும் மாடல் காரில் 44 ஆயிரம் ‘ரெடி-டு-வேர்’ நிறங்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம் அல்லது தாங்கள் விரும்பும் தனித்துவமான குறிப்பிட்ட வண்ணங்களை உருவாக்கலாம். இருப்பினும், பெரும்பான்மையான பெண்கள் மற்றும் ஆண்கள் கோஸ்ட்டிற்கு இந்த கருப்பு நிறத்தை விருப்பமாக தேர்வு செய்துள்ளனர். மோட்டார் கார் தொழில்துறையை பொறுத்தவரை



The Drive,, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com

Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK

இந்த அடர்த்தியான கருப்பு நிறத்தை உருவாக்க, 100 பவுண்ட் (45 கிலோ) பெயிண்ட் அணுவாக்கப்பட்டு, அதை பயன்படுத்துவதற்கு முன்பு காரின் மீது வெள்ளை நிறத்தில் மின்னியல் சார்ஜ் செய்யப்படுகிறது. நான்கு கைவினைஞர்களைக் கொண்ட குழுவால் இந்த கார் கையால் மெருகூட்டப்படுவதற்கு முன் இரண்டு அடுக்கு நேர்த்தியான பெயிண்ட்டிங் இந்த காருக்கு செய்யப்படுகிறது.

இவை மூன்று முதல் ஐந்து மணிநேரங்களுக்குள் நடைபெறுகிறது. இந்த செயல்பாடு பல உற்பத்தி நிறுவனங்களால் முற்றிலும் அறியப்படவில்லை, இது மோட்டார் வாகனத் துறையில் வேறு எங்கும் இல்லாத ஒன்றாகும். இந்த அடர்த்தியான நிறம் வாடிக்கையாளர்களுக்கு உயர்தரமான – முற்றிலும் மாறுபட்ட நிறம் கொண்ட காரை வழங்குவதற்கு கைவினை கலைஞர்கள் தங்கள் கைகளால் காரின் ஒவ்வொரு பகுதியிலும் இதன் கைவேலைப்பாடுகளை வழங்குவதற்கும் சரியான ஒன்றாக செயல்படுகிறது, ரோல்ஸ் ராய்ஸ் குடும்பத்தின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் விதமான அழகியலை பிளாக் பேட்ஜ் 'பிளாக் மற்றும் நியான்' கொண்டுள்ளது.

இந்த வியத்தகு முயற்சி, வடிவமைப்பாளர்கள், பொறியாளர்கள் மற்றும் கைவினைஞர்களின் மாறுபட்ட குறிப்பிட்ட, முற்றிலும் தனிப்பயனாக்கக்கூடிய செயல்முறையை உருவாக்க ஒத்துழைத்தது, இது ரோல்ஸ் ராய்சின் புகழ்பெற்ற கார்களான எக்ஸ்டசி மற்றும் பாந்தியோன் போன்றவற்றில் பயன்படுத்தப்பட்ட முன்புற கிரில்களை வழக்கமான முறையில் இருந்து மாற்றியமைக்க அனுமதித்தது. இந்தக் கூறுகள் வெறுமனே ஓவியம் வரைவதற்குப் பதிலாக, ஒரு குறிப்பிட்ட குரோம் எலக்ட்ரோலைட் பாரம்பரிய குரோம் முலாம் பூசுதல் செயல்முறைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது, இது துருப்பிடிக்காத - எக்கு அடி மூலக்கூறில் இணை - டெபாசிட் செய்யப்பட்டு, அதன் பூச்சு கருமையாகிறது. இறுதியாக இந்த நிறத்தின் தடிமன் ஒரு மைக்ரோமீட்டர் ஆகும். அதாவது மனித முடியின் அகலத்தில் நூறில் ஒரு பங்கு ஆகும். இந்த கூறுகள் ஒவ்வொன்றும் காரில் பொருத்தப்படுவதற்கு முன்பு கண்ணாடி - கருப்பு நிற குரோம் பூச்சை அடைய கையால் துல்லியமாக மெருகூட்டப்படுகின்றன.

இந்த காரின் சக்கரங்கள் பெஸ்போக் 21-இன்ச் வடிவமைப்பைக் கொண்டுள்ளன. இவை பிளாக் பேட்ஜ் ஹவுஸ் ஸ்டைலில் வடிவமைக்கப்பட்டு பிளாக் பேட்ஜ் கோஸ்ட்டுக்காகவே பிரத்யேகமாக தயாரிக்கப்படுகிறது. இதன் ஒவ்வொரு சக்கரத்திலும் உள்ள பேரல்கள் மூன்று அச்சுகளில் போடப்பட்ட கார்பன் பைபர் 22 அடுக்குகளைக் கொண்டுள்ளது. பின்னர் விளிம்பின் வெளிப்புற விளிம்புகளில் மீண்டும் மடிக்கப்பட்டு அதிக வலிமைக்காக மொத்தம் 44 கார்பன் பைபர் அடுக்குகளால் தயாரிக்கப்பட்டுள்ளது. இவை ஏரோஸ்பேஸ் தர டைட்டானியம மூலம் பாஸ்டென்சர்களைப் பயன்படுத்தி 3D- அலுமினிய மையம் விளிம்புடன் பிணைக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள டபுள் ஆர் சின்னம் எல்லா நேரங்களிலும் கார் கம்பீரமாக இருப்பதை உறுதி செய்கிறது. மேலும் மென்மை நிறம் கொண்ட அரக்கு பூச்சுகள் இதன் சக்கரங்களை பாதுகாக்கப் பயன்படுத்தப்படுகிறது, இந்த சக்கரங்களின் உள்ள தனித்துவமான கார்பன் பைபர் கட்டுமான தொழில்நுட்பம் சக்கரங்களில் ஏதேனும் பிரச்சினைகள் உள்ளதா என்பதை கண்காணிக்க வாடிக்கையாளர்களுக்கு உதவுகிறது.

உட்புறம்

மேம்பட்ட ஆடம்பரப் பொருட்களால் இதன் உட்புறம் மிகவும் கவனமுடன் வடிவமைக்கப்பட்டு, அதன் உட்புறத் தொகுப்பு தனித்துவமான சூழலைக் கொண்டுள்ளது. பிளாக் பேட்ஜ் கோஸ்டின் வியத்தகு இயந்திர நோக்கத்தை நினைவுபடுத்தும் போது, கோஸ்டின் போஸ்ட் ஓபுலண்ட் டிசைன் தத்துவத்திற்கு ஏற்ப இதில் தரமான பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வெளிப்படையான அறிக்கைக்கு பதிலாக நம்பகத்தன்மைமிக்க பொருட்களை அதில் பயன்படுத்துவது என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். இந்த உணர்வின் அடிப்படையில், கார்பன் மற்றும் உலோக இழைகளால் ஆழமான வைர வடிவத்தை உள்ளடக்கிய சிக்கலான ஆனால் நுட்பமான வடிவமைப்பு கைவினைஞர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் உட்புறம் பல அடுக்கு மரக்கட்டைகள் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மேல்மட்டத்தின் அடிப்பகுதிக்கு கருப்பு நிற மரத்திலான தகடுகள் பயன்படுத்தப்படுகிறது. இது தொழில்நுட்ப பைபர் அடுக்குகளில் ஒரு இருண்ட அடித்தளத்தை உருவாக்குகிறது. மேலும் ரெசின்-பூச்சு கொண்ட கார்பனிலிருந்து நெய்யப்பட்ட இழைகள் மற்றும் ஒரு வைர வடிவத்தில் போடப்பட்ட மாறுபட்ட உலோகம்-பூசப்பட்ட நூல் கையால் சரியான சீரமைப்பில் உள்ள கூறுகளுக்குப் பயன்படுத்தப்பட்டு, முப்பரிமாண விளைவை உருவாக்குகிறது. இந்த அசாதாரண மரத்தகட்டை பாதுகாக்க, ஒவ்வொரு கூறுகளும் 100 டிகிரி செல்சியஸ் அழுத்தத்தின் கீழ் ஒரு மணிநேரம் வைத்து தயாரிக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து 6 அடுக்குகளை கொண்ட இதன் மேற்பரப்பு ஒரு வகையான உலோகப் பூச்சைக் கொண்டு உருவாக்கப்படுகிறது. இது மோட்டார் காரில் பொருத்தப்படுவதற்கு முன்பு கையால் நன்கு மெருகூட்டப்படுகிறது.

இதில் உள்ள பிரத்யேக பின் இருக்கைகளின் தொழில்நுட்பம் பைபர் 'நீர்வீழ்ச்சி' பிரிவு பிளாக் பேட்ஜ் குடும்ப மையக்கருத்தைப் பெறுகிறது: இது லெம்னிஸ்கேட் எனப்படும் சாத்தியமான இன்பினிட்டியைக் குறிக்கும் கணிதக் குறியீடு ஆகும். பிளாக் பேட்ஜ் கோஸ்டின் ஷாம்பெயின் குளிரூட்டியின் மூடிகள் ராக்கெட்டுகளில் பயன்படுத்தப்படும் அலுமினியத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. இது நுட்பமான வண்ணம் பூசப்பட்ட அரக்கு நிறத்தின் மொத்தம் ஆறு அடுக்குகளில் மூன்றாவது மற்றும் நான்காவது அடுக்குகளுக்கு இடையில் பயன்படுத்தப்படுகிறது, இந்த சின்னம் தொழில்நுட்ப பைபர் வெனீருக்கு மேலே மிதப்பது போன்ற மாயையை உருவாக்குகிறது. டாஷ்போர்டு மற்றும் பின்புற கேபினில் உள்ள காற்று துவாரங்கள் உடல் நீராவி படிவுகளைப் பயன்படுத்தி இருட்டாக்கப்படுகின்றன, இது உலோகத்தை வண்ணமயமாக்கும் சில முறைகளில் ஒன்றாகும், இது காலப்போக்கில் அல்லது மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதன் மூலம் அதன் பாகங்களில் நிறமாற்றம் அல்லது கறையை ஏற்படுத்தாது. இதன் உட்புறத்தில் டைம்பீஸ் வடிவலான கடிகாரம் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. பன்னிரெண்டு, மூன்று, ஆறு மற்றும் ஒன்பது மணி முள்களை மட்டுமே கொண்டுள்ள இந்த கடிகாரம் ஒரு அடக்கமான குரோம் பினிஷில் தயாரிக்கப்பட்டுள்ளது. கோஸ்டுடன் அறிமுகமான உலகின் முதல் பெஸ்போக் புதுமையால் இந்த டைம்பீஸ் இணைக்கப்பட்டுள்ளது: இதன் முன்புறம் 850க்கும் மேற்பட்ட நட்சத்திரங்களால் சூழப்பட்ட ஒளிரும் லெம்னிஸ்கேட்டைக் காட்டுகிறது. டாஷ்போர்டின் பயணிகள் பக்கத்தில் அமைந்துள்ள இது, உட்புற விளக்குகள் எரியாத போது, விண்மீன்களின் தோற்றத்தை உருவாக்குகிறது.



The Drive,, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com

Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK

இதன் உட்புறம் பொருத்தப்பட்டுள்ள இன்பினிட்டி சின்னம் ஒளிருவதற்கு 152 எல்இடிக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவை சமமாக எரிவதை உறுதிசெய்ய, 2 மிமீ தடிமன் கொண்ட ஒளி வழிகாட்டி பயன்படுத்தப்படுகிறது, இதில் 90,000க்கும் மேற்பட்ட லேசர்-பொறிக்கப்பட்ட புள்ளிகள் மேற்பரப்பு முழுவதும் உள்ளன. இது ஒளியை சமமாக வழங்குவதோடு மட்டுமின்றி, ஸ்டார்லைட் ஹெட்லைனரின் நுட்பமான பிரகாசத்தை எதிரொலித்து, திசுப்படலம் முழுவதும் கண்கள் சுழலும்போது மின்னும் விளைவை உருவாக்குகிறது.

வடிவமைப்பு

பிளாக் பேட்ஜ் ஒரு அழகியல் மட்டுமல்லாமல் அனுபவத்தை வழங்கும் காராகும். இந்த காரை விரும்பிய வாடிக்கையாளர்கள், பிளாக் பேட்ஜ் கோஸ்டை குறிப்பிடத்தக்க வடிவமைப்பு முதல் பொறியியல் துறை வரை மாற்றி அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். அவ்வாறு செய்ததன் மூலம், வடிவமைப்பாளர்கள், பொறியாளர்கள் மற்றும் கைவினைஞர்களின் குறிப்பிடத்தக்க செயல்பாடுகளால், பிளாக் பேட்ஜ் கோஸ்ட் அழகியலுடன் ஒரு தெளிவான ஓட்டுநர் ஆளுமையை உருவாக்கி உள்ளது.

ரோல்ஸ் ராய்ஸ் பாண்டம் காரில் அறிமுகமான தனியுரிம ஆல்-அலுமினிய ஸ்பேஸ்ஃப்ரேம் கட்டமைப்பான ஆடம்பர கட்டிடக்கலை அதன் சக்திவாய்ந்த தன்மைக்கு முக்கியமானதாகும். இது காருக்கு அசாதாரண கம்பீரத்தை வழங்குவதோடு மட்டுமல்லாமல், அதன் நெகிழ்வுத்தன்மை மற்றும் அளவிடுதல் ஆகியவை கோஸ்ட் ஆல்-வீல் டிரைவ், நான்கு சக்கர ஸ்டீயரிங் மற்றும் விருது பெற்ற பிளானர் சஸ்பென்ஷன் அமைப்பு ஆகியவற்றைக் கொண்டிருக்க அனுமதித்தது. பிளாக் பேட்ஜைப் பொறுத்தவரை, இந்த ஒப்பற்ற பொறியியல் தன்மைகள் விரிவாக மறு-வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த காரில் டுவின் – டர்போசார்ஜ்டு 6.75 லிட்டர் வி12 என்ஜின் பொருத்தப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த புகழ்பெற்ற மின் உற்பத்தி நெகிழ்வுத்தன்மை கூடுதலாக 29பிஎஸ்-ஐ உருவாக்க பயன்படுத்தப்பட்டு, மொத்த உற்பத்தி 600PS/592hp ஆக உருவாக்குகிறது. இதன் முறுக்கு விசையானது 50என்எம் அதிகரிக்கப்பட்டு தற்போது 900என்எம் ஆக உள்ளது. மேலும் இதில் பவர்டிரெய்ன் பெஸ்போக் டிரான்ஸ்மிஷன் மற்றும் த்ராட்டில் ட்ரீட்மென்ட்களும் உள்ளது. இது என்ஜினின் ஆற்றலை அதிகரிக்க உதவுகிறது. இதில் உள்ள ZF எட்டு-வேக கியர் பாக்ஸ் மற்றும் முன் மற்றும் பின்-ஸ்டீயர் அச்சுகள் இரண்டும் இணைந்து செயல்படுகின்றன, இது த்ராட்டில் மற்றும் ஸ்டீயரிங் உள்ளீடுகளைப் பொறுத்து டிரைவருக்கு பின்னூட்டத்தின் அளவை சரிசெய்யும்.

பிளாக் பேட்ஜ் போர்ட்போலியோவில் உள்ள அனைத்து தயாரிப்புகளையும் போலவே, இதில் பொருத்தப்பட்டுள்ள கியர் 'லோ' பொத்தான் பிளாக் பேட்ஜ் கோஸ்டின் முழுத் தொழில்நுட்பத் தொகுப்பையும் வழங்குகிறது. அனைத்து 900 என்எம் முறுக்குவிசையும் வெறும் 1700ஆர்பிஎம்மில் இருந்து கிடைக்கிறது, ஒருமுறை குறைந்த பயன்முறையில், கியர்ஷிப்ட் வேகம் 90 சதவீதமாக குறைக்கப்படும்போது, பிளாக் பேட்ஜ் கோஸ்ட் மிகுதியான ஆற்றலை உடனயாக வழங்குகிறது.



The Drive,, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com

Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK

பிளாக் பேட்ஜ் கோஸ்ட்டைப் பொறுத்தவரை  அதன் மீதான நம்பிக்கையை அதிகரிக்க, பிரேக்கிங் பைட் பாயின்ட் உயர்த்தப்பட்டுள்ளது அதன் ஆக்சிலேட்டர் பாயிண்ட் குறைக்கப்பட்டுள்ளது. பேட்ஜ் கோஸ்ட் ஒரு வலுவான பிரேக்கிங் தொழில்நுட்ப தொகுப்புடன் வருகிறது.  இருப்பினும், தடிமனான உயர் வெப்பநிலை பிரேக் காலிபர் பல்வேறு வண்ணங்களின் புதிய தொகுப்பு, வரவிருக்கும் பிளாக் பேட்ஜ் கோஸ்ட் மாடல் கார்களில் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த பிளாக் பேட்ஜ் கோஸ்ட் கார்கள் தற்போது கிடைக்கின்றன. விலை பின்னர் அறிவிக்கப்படும்.

-முடிவு-



The Drive,, Chichester, PO18 0SH, UK   +44 (0)1243 384000   enquiries@rolls-roycemotorcars.com   www.rolls-roycemotorcars.com

Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK





| Dimensions | |
|---|---|
| Vehicle length | 5546 mm / 218.3 in |
| Vehicle width | 2148 mm / 84.6 in |
| Vehicle height | 1571 mm / 61.9 in |
| Wheelbase | 3295 mm / 129.7in |
| Turning circle | 13 m / 42.7 ft |
| Boot volume (DIN) | 500 ltr |

| Engine | |
|---|---|
| Engine / cylinders/ value | V/ 12 / 48 |
| Fuel management | Direct Injection |
| Power output @ engine speed | 591 bhp / 441 kW / 600 PS @ 5250-5750 rpm |
| Max torque @ engine speed | 900 Nm / 664 lb ft @ 1700-4250 rpm |
| Fuel type | 10:1 / Premium Unleaded *1 |

| Weight | |
|---|---|
| Unladen weight (DIN) | 2490 kg / 5489.5 lbs |

| Performance | |
|---|---|
| Top speed | 250 km/h / 155 mph (governed) |
| Acceleration 0-60 mph | 4.5 seconds |
| Acceleration 0-100 km/h | 4.7 seconds |

| Fuel consumption and CO2 emissions NEDC corr figures* | |
|---|---|
| Consumption (combined) | N/A |
| CO2 Emissions (combined) | N/A |

| WLTP figures* | |
|---|---|
| Combined consumption | 15.8 ltr /100km / 17.9 mpg |
| CO2 emissions combined | 359 g/km |

*Preliminary data not yet confirmed, subject to change.

ROLLS-ROYCE
MOTOR CARS

The Drive, Westhampnett, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com

Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK

மேலும் தகவல்களுக்கு

இது குறித்து மேலும் தகவல்களை அறிந்து கொள்ள நீங்கள் எங்களின் பத்திரிக்கை செய்தியை பார்க்கலாம். மேலும் உயர்தரமிக்க படங்கள் மற்றும் வீடியோவை பார்க்க அதன் இணையதளத்தை பார்க்கவும்.

மேலும் இது குறித்த தகவல்களை நீங்கள் சமூக வலைதளங்களான: LinkedIn; YouTube; Twitter; Instagram; மற்றும் Facebook போன்றவற்றிலும் பார்த்து தெரிந்து கொள்ளலாம். படங்கள் மற்றும் வீடியோவிற்கு இந்த லிங்கை பார்க்கவும்: https://bit.ly/3Et6243

ஆசிரியர்களுக்கான குறிப்பு

ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் கார்ஸ் நிறுவனம் பிஎம்டபிள்யூ குழுமத்திற்கு சொந்தமான முழு துணை நிறுவனமாகும், இது விமான எந்திரங்கள் மற்றும் உந்துவிசை அமைப்புகள் தயாரிக்கும் ரோல்ஸ் ராய்ஸ் பிஎல்சி நிறுவனத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் கார்ஸ் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மற்றும் வெஸ்ட் சசெக்ஸில் உள்ள குட்வுட் உற்பத்தி ஆலை ஆகியவற்றில் 2,000க்கும் மேற்பட்ட திறமையான ஆண் மற்றும் பெண் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

தொடர்பு விவரம்| பிராந்திய அளவில்


| | | |
|---|---|---|
| மைக்கேல் சான் | +65 8321 7041 | michelle.chan@rrmcapac.com |
| ஷெரில் கெஸியா | +61 435 779 950 | sheryl.kezia@rrmcapac.com |
| வேரா சென் | +65 9816 2480 | vera.chen@rrmcapac.com |
| லிம் ஷென் யீ | +60 12 218 9015 | shen.yee@rrmcapac.com |
| இவோன் பிரிகிட்டே | +62 819 0635 2975 | yvonne.b@rrmcapac.com |
| சோலி புய் | +84 38 771 7442 | chloe@rrmcapac.com |
| சுடினுன் குலா-திலகா | +66 61 956 2939 | chutinun@imageimpact.co.th |
| ஹல் செருதின் | +65 6838 9675 | hal.serudin@rolls-roycemotorcars.com |
| உதவிப் பிரிவு | +65 9017 6272<br>+66 8307 66196 | info@rrmcapac.com |





Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK